DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No.61/2020
Prosecution witness – P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கௌதம் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

03.06.2026

**எதிரி ஆஜரில்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>:–**

1. நான் கமுதி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர்கள் திரு.முருகநாதன் மற்றும் திருமதி.கவிதா ஆகியோர் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டார்கள். இன்று பணிச்சுமை காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலவில்லை.

2. கடந்த 2019 ஆண்டு கமுதி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளர்களாக பணிபுரிந்து வந்தார்கள் என்பதை வழக்கு ஆவணங்கள் மூலம் தெரிந்து கொண்டேன். அதனடிப்படையில் அவர்களது கையெழுத்து மற்றும் கையொப்பம் பற்றி எனக்கு நன்கு தெரியும். அதனடிப்படையில் அவர்கள் சார்பாக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

3. கடந்த 21.10.2019ம் தேதி 14.00 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக் குற்ற எண்.194/2019 இ.த.ச. பிரிவு 379–ன் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **புகார் மனு அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் இவ்வழக்கை அன்றைய தினமே புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்று 14.45 மணிக்கு சம்பவ இடத்தை சாட்சிகள் அய்யனார் மற்றும் காசிலிங்கம் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்

மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. பின்னர் சம்பவ சாட்சிகளான சாட்சிய பட்டியலிலுள்ள 1 முதல் 5 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் விசாரணையில் குற்ற சம்பவம் நடைபெற்றது உண்மையென தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி லிங்கம் (எ) பாரதி என்பவரை கோட்டைமேடு பசும்பொன் தேவர் காலேஜ் அருகே 16.00 மணிக்கு கைது செய்து நிலையம் கொண்டு வந்து பாராவசம் ஒப்படைத்து பின்னர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

5. மேற்படி நபர் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தங்கவேலு மற்றும் சொக்கலிங்கம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். **அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

6. பின்னர் சாட்சிகள் தங்கவேலு மற்றும் சொக்கலிங்கம் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து வெள்ளை மற்றும் செவலை கலந்த பொட்டை வெள்ளாடு ஒன்று கைப்பற்றி அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி திருடி சென்ற வெள்ளை மற்றும் செவலை கலந்த பொட்டை வெள்ளாடு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சார்பு ஆய்வாளர் திரு.முருகநாதன் பணிமாறுதல் ஆகி சென்றுவிட்டபடியால் பின்னர் வழக்குக் கோப்பினை சார்பு ஆய்வாளர் திருமதி.கவிதா அவர்களிடம் ஒப்படைத்தார்.

7. மேற்படி வழக்குக் கோப்பினை தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் திருமதி.கவிதா வழக்கில் திருடப்பட்ட வெள்ளை மற்றும்

செவலை கலந்த பொட்டை வெள்ளாடு ஒன்றை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து C.P.No.134/2019 பிரகாரம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.8 என குறியீடு செய்யப்படுகிறது.**

8. பின்னர் அத்துடன் 28.11.2019ம் தேதியன்று வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 379–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2. அ.சா.1 அளித்த பொய்யான புகாரைப் பெற்று சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. கூறிய விதத்தில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.03 18:13:45 +0530